
# Battle of vanni 2013

## P.C.C Vs K.M.V



## 3rd ENCOUNTER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

## Vs

## கிளிநொச்சி மகா வித்தியாலயம்




காலம் : 07, 08 - 06 - 2013 (மு.ப: 9.00 - பி.ப: 4.30)

இடம் : புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெற்றிகள் தொடர என் இனிய வாழ்த்துக்கள்

தனிமனித சமுதாயத்தின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் பாடசாலைகள் ஆணிவேராக இருந்து வருவது யாரும் அறிந்த உண்மை. ஒரு பாடசாலையின் தனித்துவமான தொடர் சாதனங்களிற்கு அப்பாடசாலைச் சமூகத்தின் கடின உழைப்பும் தளராத உறுதியோடு கூடிய நம்பிக்கையுமே காரணம் எனலாம். அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மாணவர்களின் ஆரோக்கியமான கற்றல் செயற்பாட்டிற்கு விளையாட்டு அவசியமானது என்பது கல்வியாளர்களின் சிந்தனையாகும். விளையாட்டுத்துறையினைப் பொறுத்த மட்டில் உடல் ஆரோக்கியம் என்பது மிக மிக அவசியமானது. அவ் ஆரோக்கியமே மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு வழிவகுக்கும் என்பது திண்ணம்.

கல்வியிலும் விளையாட்டிலும் தொடர் சாதனை கண்டுவரும் மத்திய கல்லூரியில் இவ்வாண்டு வன்னியின் சமர் எனும் கடினபந்து துடுப்பாட்டப் போட்டி இடம் பெற இருப்பதையிட்டு மனநிறைவடைகின்றேன். இப்போட்டி தொடர்பாகப் பாடசாலை சமூகத்தினரால் வெளியிடப்படும் சிறப்புமலர் சிறப்புற வெளிவர எனது மனப்பூர்வமான வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நா. வேதநாயகன்**
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

**"நட்புக்கிண்ணத்துக்கான மாபெரும் துடுப்பாட்டப்போட்டி"யினால் வரலாற்றில் அடுத்த அத்தியாயத்தில் அடியெடுத்து வைப்போம்.**

கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கும் புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடையில் பல வருடங்களாக நடைபெற்று வந்த நட்புக்கிண்ணத்திற்கான மாபெரும் துடுப்பாட்டப் போட்டியானது குறிப்பிட்ட சில வருடங்களாக நடைபெறாமல் போனமை துரதிஷ்டவசமானதே. எனினும் மீண்டும் இப்போட்டியானது ஆரம்பிக்கப்பட்டமை எமக்கு மட்டு மல்லாமல் இரு மாவட்ட விளையாட்டு வீரர்களுக்கும் மட்டற்ற மகிழ்ச்சியினை ஏற்படுத்தியிரு க்கும் என்பதில் ஐயமில்லை. இதுவரை காலமும் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளில் கவனம் செலுத்தி வந்த போதிலும் மக்களின் ஏனைய துறைகளிலும் கவனம் செலுத்த வேண்டிய கடமைப்பாடு எமக்குண்டு. அதனடிப்படையில் இருமாவட்டங்களினதும் வரலாற்றுப்பதிவில் இடம் பெற்றிருந்த நட்புக்கிண்ண துடுப்பாட்டமானது மக்களின் மீள் குடியேற்றம் அவர்களின் வாழ் வாதாரங்களின் மேலான கவனம் செலுத்துகை என்பவற்றினால் பின்தள்ளப்பட்ட நிலையில் மீண்டும் முதற்தடவையாக ஆரம்பிக்கப்பட்டிருப்பது வரலாற்றில் அடுத்த அத்தியாயத்தில் அடி யெடுத்து வைப்பதற்கான உந்துதலை வழங்கியிருக்கின்றது. என்றால் அதனை மறுப்பதற்கில்லை.

இப்போட்டிகளை நடத்துவதற்காக முன்னின்றுழைத்த ஏற்பாட்டுக்குழு வினரது முயற்சிகள் தொடர வேண்டும். விளையாட்டுக்களில் வெற்றியும் தோல்வியும் என்பது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட ஒன்று. ஒரு குழு வெற்றி பெற்றால் அடுத்த குழு தோல்வி பெறுதல் என்பது இயற்கையின் நியதி. எனவே வெற்றி தோல்விகளை விளையாட்டின் பரிசாக ஏற்று தத் தமது மாவட்டங்களின் பெருமைகளை பறைசாற்றி சிறந்ததொரு பண்புடைய விளையாட்டு வீரர்களாக மலர வேண்டுமென வீரர்களையும் நட்புக்கிண்ண போட்டி ஏற்பாட்டாளர்களையும் மனதார வாழ்த்துகின்றேன்.

**திருமதி.றூ.கேதீஸ்வரன்**
அரசாங்க அதிபரும், மாவட்டச்செயலாளரும், - மாவட்டச்செயலகம் - கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Battle of vanni 2013



**கல்வியும் விளையாட்டும் இணைந்து**
**வெற்றிப் படைப்புக்கள் பெற்றிட**
**என் இனிய வாழ்த்துக்கள்**

ஒரு பாடசாலை வினைத்திறன் மிக்க பாடசாலையாகத் திகழ வேண்டுமாயின் கற்றல் செயற்பாடுகளில் மட்டுமன்றி, இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் முன்னோக்கிய வீச்சுக் கொண்டதாக மிளிர வேண்டும். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் தம்மளவில் மட்டும் செயற்திறன் உடையவர்களாக இல்லாமல் ஏனையவர்களின் கவனக்குவிப்புக்கும், ஈர்ப்புக்கும் உள்ளாக வேண்டிய நிலை இருப்பதால் தங்கள் திறன்களையும் சாதனைகளையும் உலக நடப்பியலில் பதிவுக்கு உட்படுத்த வேண்டிய தேவை காலத்தின் நியதியென நான் கருதுகின்றேன்.

முல்லைக் கல்வி வலயத்தையும் கிளிநொச்சி வலயத்தையும் இணைக்கும் நடப்பியல் அங்கமாக இக் கடினப் பந்துத் துடுப்பாட்டம் அமைந்துள்ளது. இது ஒரு வரலாற்றுச் சமராக 2007ம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி மகா வித்தியாலத்திற்கும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் "கிளி முல்லை நட்புக் கிண்ணம்" என்ற பெயரில் இடம் பெற்று வருகின்றது.
காலவோட்ட வரலாறு இடையில் தடங்கலை ஏற்படுத்தியபோதும் "வீழுவோமாயினும் மீண்டும் எழுவோம்" என்ற எண்ணக்கருவைச் சுமந்து புதுப்பொலிவோடு பல்வேறு பரிமாண வளர்ச்சியின் பின் மீண்டும் இக் கடினப்பந்துத் துடுப்பாட்டம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடை பெறுவதை யிட்டு யான் பெருமகிழ்வடைகின்றேன்.

தமிழ் மணம் கமழ்ந்து வீரம் செறிந்து பல சாதனைகள் படைத்த எம் வன்னி மண்ணில் வரலாற்றுப் புகழ் மிக்க சமராக கிளி முல்லை நட்புக் கிண்ணத் துடுப்பாட்டம் அமைந்துள்ளது. போட்டியில் பங்கேற்கும் இரு அணியினரும் அன்பைப்பிணைந்து பாசத்தை அரவணைத்து " யாதும் ஊரே யாவரும் கேளீர் தீதும் நன்றும் பிறர் தர வாரா " என்ற கணியன் பூங்குன்றனாரின் கூற்றுக்கு அமைய கைகோர்த்து கல்வியிலும் இணை பாட விதானச் செயற்பாட்டிலும் வெற்றிச் சாதனைகள் பல படைத்து என்றும் வீறு நடை போட்டு மிளிர என் நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

**திரு. மா.இராசகுமார்** (வலயக்கல்விப்பணிப்பாளர் - முல்லைத்தீவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை

உலகமே வியர்ந்து பார்க்கும் விளையாட்டுக்களில் ஒன்றாக துடுப் பாட்டம் திகழ்கின்றது. இன்று பல பாடசாலைகள் இத் துடுப்பாட்டம் மூலம் தமது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றன. அந்த வகையில் கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் துடுப்பாட்ட த்தினை மிக நீண்ட காலமாக பயின்று வருகின்ற ஒரு பாடசாலையாக இருந்து வருகின்றது.


விளையாட்டின் மூலம் கல்வி என்பது இன்று பயன்படுத்தப்படுகின்ற ஒரு கற்றல் உபாயமாகும். ஆனால் ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே ஆசிரியர்கள் இதனை செய்து பார்க்கின்றனர். விளையாட்டின் மகிமையும், நேர்மையும் கல்வியை ஊட்டுவதற்கு நிச்சயமான ஒரு ஊடகமாகும்.

கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் விளையாட்டில் மட்டுமல்ல கல்வியிலும் ஏனைய துறைகளிலும் சாதனை புரிந்துவரும் ஒரு பாடசாலையாகும். இவர்கள் முல்லைத்தீவில் புகழ்பூத்த பாடசாலையான புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியுடன் துடுப்பாட்ட போட்டியில் ஈடுபடுவது என்பது இரு மாவட்டங்களினதும் உறவுக்கும், நட்புக்கும் பாலமாக அமையும் என்பது உறுதியானது.

அந்த வகையில் நட்புறவு போட்டியில் பங்கு கொள்ளும் இரு பாட சாலை மாணவர்களும் தமது திறமைகளை வெளிக்காட்டவும், சாதனைகள் படைக்கவும் எனது மனப்பூர்வமான பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**க.முருகவேல்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெற்றியின் திசைநோக்கிய துடுப்பாட்டம்

முல்லை மண்ணின் முத்தாக நின்று, முழுநிலவாய்ப் பிரகாசிக்கின்ற மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும், காலங்கால மாக வரலாற்றுப் பதிவுகள் பலவற்றைத் தாங்கி மிளிரும் கிளி / கிளிநொச்சி மகாவித்தியாலயமும் "வன்னியின் பெருஞ்சமர்" என்னும் ஆக்க பூர்வமான செயல் வீரத்துடன் தம்மை இணைத்து வன்னி மண்ணின் கல்வி இலக்கிற்குக் கலங்கரை விளக்கமாக திகழ்வதையிட்டு இறுமாப்படை கின்றேன்.

வளங்கொழிக்கும் வன்னிப் பெரு நிலப்பரப்பில் ஒளிரும் இப் பாடசாலைகள், மாணவர்களின் உடல், உள, சமூக ஆளுமைகளை விருத்தி செய்வதில் போட்டிகளையும், நிகழ்வு களையும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றன. இத்தகைய செயற்பாடுகளில், இன்றைய உல கையே திசை திருப்பி ஆனந்தக் கடலில் திளைக்கவைத்து, கல்விமான்கள் பலருக்கும் விருந் தூட்டும் போட்டி, துடுப்பாட்டமே என்பது வெள்ளிடைமலை.

கிளி - முல்லை நட்புக்கிண்ணத்திற்கான மாபெரும் துடுப்பாட்டப் போட்டியில் இரு பாடசாலைகளினதும் முதன்மை அணிகள், நீண்ட கால இடைவெளிக்குப் பின்னரும், 3வது அகவையில் காலடி எடுத்து வைத்து வீறு நடை போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு, மனங் குளிர்ந்து பேருவகையடைகின்றேன். இச் சமரானது இவ்வாண்டிலே இரு பாடசாலைகளையும் ஊக்குவித்து புதிய நுட்பங்களையும், மாணவர்களிடையே தலைமைத்துவம், நட்புறவு, புரிந்துணர்வு, தன்னம்பிக்கை, விட்டுக்கொடுப்பு முதலிய பண்புசார் விருத்திகளை உருவாக்கவும் வழி சமைக்கிறது. அத்துடன் இவ்விருபாடசாலைகளும் இப்போட்டியில் தாம் பெறும் இடங்களை தொடர்ந்து வரும் காலங்களில் தக்கவைத்துக் கொள்வதிலும், அதைத் தமக்குரிய சிறப்பாகக் கொள்வதிலும் அக்கறை காட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. வன்னியின் பெருஞ்சமர் இவ்வாண்டு எமது பாடசாலை மதானத்திலே நடைபெற ஏற்பாடாகியுள்ளதையிட்டு பெரு மகிழ்வடைவதுடன், எமது கல்லூரியின் துடுப்பாட்ட அணி வளர்வதற்கும், வீச்சுப்பெறுவதற்கும் மூச்சாய் உழைத்த அனைத்து நல்லுள்ள ங்களையும் நன்றியறிதலுடன் பாராட்டுகின்றேன். இப்போட்டியானது இனி வரும் காலங்களிலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு, கல்வியின் இலக்கை நோக்கிச் செல்லும் பூரண ஆளுமைப் பண்புள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று மன மகிழ்வுடன் என் வாழ்த்துக்களைக் கூறி ஆசிவழங்குவதில் மன நிறைவடைகின்றேன்.

**திரு.சி.சுப்பிரமணியேஸ்வரன்** (அதிபர் - மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேசிய, சர்வதேச நட்சத்திரங்களை உருவாக்குவோம்

எமது பாடசாலைக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்குமிடையில் கிளி - முல்லை நட்புக் கிண்ணம் என நடைபெற்ற துடுப்பாட்டப் போட்டி நான்கு வருட இடை வெளியின் பின்னர் மீண்டும் இவ்வருடம் நடைபெறுவது மிகவும் மகிழ்வுக்குரியதாகும். இரு மாவட்டங்களின் உறவின் அடையாளமாக தொடக்கப்பட்ட இப்போட்டி காலங்கள் மாறினும் உறவுகள் மாறாது என்பதற்கு அடையாளமாகத் திகழ்கிறது. 2007ஆம் ஆண்டு முதல் ஆரம்பி க்கப்பட்டு மூன்றாவது போட்டியாக இப்போட்டி நடைபெறுகின்றது.

மைதானங்கள் மாணவர்களை முழுமையான மனிதர்களாக உரு வாக்குகின்றது. சிறந்த சமூகமயமாக்கலை மைதானங்கள் செய்யத்தவறுவதில்லை. கடந்த காலங்களில் விளையாடிய பல மாணவர்கள் நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் தம் பாதங்களைப் பதித்து சாதனை புரிந்துகொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் நல்ல மனிதர் களாக சமூகத்தில் உலாவந்து கொண்டிருக்கின்றனர். சிலர் கொடியபோரின் காரணமாக எம் மோடு இல்லாமல் போயிருக்கின்றனர். இந்த சாதனையாளர்கள் எமது இருபள்ளிகளுக்கும் பெருமை சேர்த்தவர்கள்.

வட மாகாணத்தில் புகழ்பூத்த பல கல்லூரிகளிடையே அரை நூற் றாண்டையும் தாண்டி இவ்வாறான போட்டிகள் நடைபெற்று வருகின்றன. எமது பள்ளிகளும் நூற்றாண்டு தாண்டி இப்போட்டியில் பங்கு கொள்ளுமென திடமாக நம்புகிறோம். மீளக்குடி யேற்றத்தினைத் தொடர்ந்து இந்தப்போட்டியை மீண்டும் நடாத்த மீள் கட்டுமான நெருக்கடிக் குள் மைதானப்புனரமைப்பு வேலைகளையும் செய்து இப்போட்டியை தமது கல்லூரிமைதான த்தில் நடாத்த சகல ஏற்பாடுகளையும் செய்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிச் சமூகத்திற்கு எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்து, கிளி-முல்லை நட்புக்கிண்ணபோட்டிக்கு ஊடாக தேசிய, சர்வதேச நிலை நட்சத்திரங்களை உருவாக்குவோம் என உறுதியெடுத்துக் கொள்வோம்.

**அ. பங்கையற்செல்வன்** (அதிபர் - கிளிநொச்சி மகாவித்தியாலயம், கிளிநொச்சி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Battle of Vanni 2013



## பயிற்றுவிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

வன்னியின் பெருஞ்சமர் (BATTLE OF VANNI) என அழைக்கப்படும் கிளி, முல்லை நட்புறவுக் கிண்ணம் 2013 ஆனது நான்காண்டு இடைவெளிகளின் பின்னர் மீண்டும் நடைபெறவுள்ளது. 2007இல் ஆரம்பிக்கப்பட்டு 2 போட்டிகள் (2007 & 2008) மாத்திரமே நடைபெற்ற நிலையில் தொடர்ந்து வந்த சூழ்நிலைகள் காரணமாக கைவிடப்பட்டு இவ்வருடம் மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது. போதிய காலஅவகாசம் கிடைக்கப்பெறாத நிலையில் 2 மாதங்களுக்குக் குறைவான காலப்பகுதியிலேயே இவர்களுக்கான பயிற்சியை என்னால் வழங்க முடிந்தது. இருப்பினும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோரின் ஆர்வமே எனக்கு பயிற்றுவித்தலில் ஒரு உந்துசக்தியாக அமைந்தது.

ஒரு மாணவனின் பாடசாலை செயற்பாடுகளானது வெறுமனே கற்றல் செயற்பாடுகளோடு மட்டும் நின்றுவிடாது இணை பாடவிதான செயற்பாடுகளிலும் தொடரவேண்டும். அதனூடாகவே ஒரு மாணவன் உடல்உளரீதியான விருத்தியினைக் காணமுடியும். எனது மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் கற்க வேண்டும் என்ற ஆர்வமும் கொண்டவர்கள். இவர்களைத் தொடர்ந்து வழிநடத்துவதன் மூலம் மாவட்ட, மாகாண, தேசிய அளவில் சாதிப்பதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு. இம் மாபெரும் போட்டியானது தொடர்ந்து வரும் காலங்களில் இதனை விடச் சிறப்பாக அமைய வேண்டும். அத்துடன் தொடர்ந்து விளையாடவிருக்கும் இளம்பராயத்தினர்க்கு ஓர் உந்துசக்தியாகவும் அமையும் என நினைக்கிறேன். இத்தருணத்தில் எனக்குத் தோள் தந்த அதிபர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள் அத்துடன் மாவட்ட வைத்திய அதிகாரிக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு வைத்தியராக, ஒரு பயிற்றுவிப்பாளராக உருவாக மூலகாரணமான இப்பாடசாலைக்கு எனது நன்றிகளைத் தெரிவிப்பதற்கு ஒரு பழைய மாணவனாக இவ்விடத்தில் கடமைப்பட்டுள்ளேன். தொடர்ந்து வரும் காலங்களில் வருகின்ற பழைய மாணவர்கள் இப்பணியினைத் தொடர்ந்தும் முன்னெடுப்பார்கள் என நம்புகின்றேன். இறுதியாக இப்போட்டியில் பங்குகொள்ளும் மாணவச்செல்வங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

Dr.**கற்கண்டு உதயசீலன்** (பழைய மாணவன் & பயிற்றுவிப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பயிற்றுனர் வாழ்த்துச்செய்தி

"வன்னியின் பெரும்போர்" என அனைவராலும் நோக்கப்படுகின்ற கிளி-முல்லை நட்புக்கிண்ணம் மூன்றாவது முறையாகவும் அரங்கேறுவது பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. வன்னிப் பெருநிலத்தில் கிரிக்கெட் ஆர்வலர்களுக்கு இப்போட்டியானது இனிய விருந்தாக அமைகின்றது. வேதனைகளும், சோதனைகளும், ஏமாற்றங்களும் நிறைந்த எமது வாழ்வியலுக்குள் இப்போட்டியானது தன்னம்பிக்கையினையும் தலைநிமிர்வினையும் தருகின்றது. சிறந்ததொரு கிரிக்கெட் பாரம்பரியத்தினை தோற்றுவித்த இரு பள்ளிச் சமூகங்களும் பெருமைக்குரியவர்கள்.

வன்னியின் பெரும்போர் என்ற கிளி - முல்லை நட்புக்கிண்ணப் போட்டியானது 2007, 2008ம் ஆண்டுகளில் பிரமாண்டமான முறையில் நடைபெற்றிருந்தது. அந்த போட்டிகளில் பங்கு கொண்டிருந்த எமது வீரர்கள் சிலர் இன்று எம்முடன் இல்லை. அவர்களை இழந்து தவித்து நிற்கும் எமது பள்ளிச் சமூகம் அவர்களின் நினைவுகளை நாள் தோறும் சுமந்து கொண்டே எமது கிரிக்கெட் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

எமது பாடசாலை அதிபர் அவர்களின் வினைத்திறனின் வெளிப்பாடுகளில் ஒன்றாக அமைந்துள்ள இப்போட்டியானது பல நூறு ஆண்டுகள் தொடர்ந்து நீடித்து நிலைக்கவும் - இரு பள்ளிகளின் நட்புறவுகளின் உறவுப்பாலமாக இப்போட்டிகள் இனிதே இடம்பெற வாழ்த்தி நிற்கின்றேன்.

**ச.அலன்டிலன்**
பயிற்றுனர் - கிளிநொச்சி ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Battle of V

## புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

துடுப்பாட்ட



**இருப்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

வை.சஜீவன்(உப அணித் தலைவர்) - ந.ஜோதிலிங்கம்(அணி முகாமையாளர்) - Dr.க.உதயசீலன்(பழையமாணவன் & பயிற்றுனர்) - சி.சுப்பிரமணியேஸ்வரன்(அதிபர்) அ.டோன் பொஸ்கோ(பிரதி அதிபர்) - S.ஜாண்(உதவிப் பயிற்றுனர்) - மா.கேசவன்(விளையாட்டுத்துறை ஆசிரியர்) - பி.பிந்துஜன்(அணித்தலைவர்)

**நிற்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

த.லக்கீரன் - கோ.வினோஜன் - ஜெ.றொய்சன் - செ.விதுசன் - க.கச்சுதன் - பா.கஜந்தன் - த.ஜிந்துசன் - அ.ஜானுசன் - கோ.மனோஜன்

**நிற்பவர்கள் பின்வரிசை** (இடமிருந்து வலமாக)

ச.பிரதீசன் - ஸ்ரீ.சிதுர்சன் - கு.தர்சாந் - நே.ரவிசெல்வம் - ஆ.ரதுர்யன் - ந.கோகுலன் - ச.சந்தனகுமார் - கு.தொனேசன் - க.ததீஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Vanni 2013

# கிளிநொச்சி மகா வித்தியாலயம்

அணி



இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)

திரு.இ.கஜமுகன் (உடற்கல்வி ஆசிரியர்) - திரு.ஆ.இராஜேந்திரகுமார் (அணிமுகாமையாளர்) - திருமதி பு.குமார் (பிரதி அதிபர்) - திரு.அ.பங்கையற்செல்வன் (அதிபர்)
திரு.த.தர்மராஜா (பிரதி அதிபர்) - செல்வன்.யோ.சுயந்தன் (அணித்தலைவர்) - திரு.ச.அலன்டீலன் (பயிற்றுனர்) - திரு.இ.சிவலிங்கம் (பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)

M.நிதுஷன் - K.யதுஷன் - R.ரஜீவன் - R.பேபிசன் - R.கயிலன் - R.புருசோத் - A.தனுஜன் - J.மிதுஷன் -. S.விதுல்ஜன் - M.நிருத்திகன்

நிற்பவர்கள் பின்வரிசை (இடமிருந்து வலமாக)

J.கஜீவன் - J.கஜீவன் - M.கிருஷ்ணதுஷாந்தன் - R.சிவரோஷன் - S.பிரகாஸ் - B.பாலகோபன் - J.விதுஷன் - R.சுபீட்ஷன் - S.டிலக்ஷன் - S.கபிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வன்னியின் பெரும் போர் 2013"







பி.பிந்துஜன்
(அணித்தலைவர்)



வை.சஜீவன்



த.லக்கீரன்



கோ.வினோஜன்



ஜெ.றொய்சன்



க.கச்சுதன்



பா.கஜந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டப் போட்டிக்கான புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியினர்


த.ஜிந்துசன்


ச.பிரதீசன்


ஸ்ரீ.சிதுர்சன்


கு.தர்சாந்


நே.ரவிசெல்வம்


ஆ.ரதுர்யன்


ந.கோகுலன்


கு.தொனேசன்


க.ததீஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “வன்னியின் பெரும் போர் 2013”







யோ.சுயந்தன்
(அணித்தலைவர்)



S.கபிலன்




B.பாலகோகுலன்




S.விதுல்ஜன்



R.ரஜீவன்



A.தனுஜன்



J.விதுஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துடுப்பாட்டப் போட்டிக்கான கிளிநொச்சி மகா வித்தியாலய அணியினர்


K.யதுஷன்


R.பேபிசன்


S.டிலக்ஷன்


J.கஜீவன்


R.கயிலன்


S.பிரகாஸ்


J.மிதுஷன்


M.நிதுர்ஷன்


J.கஜீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013

Battle of vanni

## மீண்டுமொரு பொழுது

மாண்டு போன மகிழ்வின்
மறைந்து போன நினைவுகள்
மீண்டும் மீண்டும் மின்சாரம் பாய்ச்சும்
மின்னிடும் கனவுகள்.

வன்னி மண் தந்த
வசந்த காலங்கள்
வாழ்வின் வரங்கள் - அது
வரலாறு தந்த கரங்கள்.

பச்சை வயல் வெளிகள்
பள்ளிக்கால நினைவுகள்
மிச்சமாய் இருக்கும் தேசத்தின்
மீண்டும் துளிர்க்கும் வசந்தங்கள்.

ஈராறு மாத மொன்றில்
இன்புறும் கோலங்கள்
இசைகளினால் மயங்கும்
எங்களூர்த் தேகங்கள்

மீண்டும் எங்கள் வாசல்களில்
வசந்த கீதங்கள்
சத்தங்கள் இல்லாத...
சாவுகள் முட்டாத...
"வன்னியின் பெரும்போர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2013**

**Battle of Vanni**

பார்க்கத் துடிக்கும் என்மனம்
பனிவிழும் தேசத்தில்
எங்குதான் - எங்கள் மண் சுகம்
ஒண்லைன் வாழ்க்கையும்
ஓரிரு தினங்களில் மட்டுமே!
தேசக்காற்றை தேடும் - என் மனம்
தேம்பி தேம்பி அழும் தினம்

"வன்னியின் பெரும்போர்"
நீள்வு பெறவேண்டும்.
வாழவேண்டும்! வளரவேண்டும்!!
மேற்குலக சாலைகளில் எங்களின்
வாசல்களையும் தேடிவரவேண்டும்.

**- வன்னிமகன் -**
புலத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kilinochchi M.V Vs Puthukkudiyeruppu C.C 2008



Team - K.M.V



Team - P.C.C

## Match Summery



| | |
|---|---|
| **1st innings** | |
| KMV | 85 (all out) |
| PCC | 178 (all out) |
| **2nd innings** | |
| KMV | 118 (all out) |
| PCC | 26 (1) |

**PCC WON BY 9 WICKETS**

Best batsman : Satheeshkumar(PCC)

Best Bowler : Mithursan (PCC)

Best fielder : Jekathees (KMV)

Man of the Match : Mithursan (PCC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thanks

## இதயம் தரும் குளிர்மையோடு இதழ்கள் சொல்லும் நன்றிகள்.

"வன்னியின் பெரும்போர்" என வர்ணிக்கப்படும் மாபெரும் துடுப்பாட்டப் போட்டியானது மூன்றாவது முறையாகவும் சிறப்பாக நடைபெற்றிருப்பது எம்மை மட்டற்ற மகிழ்ச்சி கொள்ள வைத்திருக்கின்றது. 2007,2008 களில் நடை பெற்ற இந்தப் போட்டியானது ஸ்திரமற்ற சமூக மாற்றங்கள் காரணமாக கடந்த பல வருடங்களாக நடைபெறாமல் போனது துரதிஸ்டமே! இருந்தும் பல்வேறு நெருக்கடிகளிலிருந்தும் மீண்டெழுந்து புதுப் பொலிவுடன் நடைபெறும் இப் போட்டியானது எங்களை மட்டுமல்லாமல் தங்களையும் சந்தோசச் சாரலில் நனையவைக்கும் என எண்ணுகின்றோம்.

இம்முறை எமது வெற்றிகளின் பக்கங்களில் அனேகரது கரங் கொடுப்புக்கள் பகிரப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. மகிழ்ச்சிக்குரியதும் கூடவே! அந்த வகையில் வெற்றிக் கிண்ணத்தை வழங்கிய K.S.R போட்டோ உரிமையாளர் கதிரவேற்பிள்ளை–சௌந்தரராசா அவர்களுக்கும், புகைப்பட உதவியை வழங்கிய சங்கர் போட்டோ ஸ்தாபனத்தாருக்கும்(கிளிநொச்சி) எமது நன்றிகள். போட்டிக் காலங்களில் போசன ஏற்பாடுகளை செய்துதவிய கிளிநொச்சி கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குனர் அவர்களுக்கும் எமது நன்றிகள். அத்தோடு வீரர்களுக்குரிய வெற்றிக் கிண்ணங்களை வழங்கிய கிளிநொச்சி மகாவித்தியாலய ஆசிரியர் சி.தவராசா அவர்களுக்கும் அன்பு கலந்த நன்றிகள்.

தவிர உணவு மற்றும் இதர உதவிகளை வழங்கிய புதுக்குடியிருப்பு ப.நோ.கூ சங்கத்தினருக்கும் எமது நன்றிகள். அத்துடன் போட்டிக்கு தேவையான பல்வேறு விளையாட்டு உபகரணங்களை தந்துதவிய "றொகான் ஒப்பந்ததாரர் & ஹாட்வெயார்" உரிமையாளர் அவர்கட்கும் எமது நன்றிகள். அத்துடன் அச்சுஊடக அனுசரணையாளர்களான Halo Star நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள். போட்டிகளைசிறப்பாக நடைபெற உதவிய எமது பாடசாலைச் சமுகத்தினருக்கும். பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் யாவருக்கும் நன்றி கூறுவதோடு இம்மலர் எழிலுருக் கொண்டு எம் கரம்தவழ உழைத்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் 2006ஆம் ஆண்டு கலைப் பிரிவு மாணவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

நன்றி

மலர்க்குழு
வன்னியின் பெரும் போர் 2013
07-06-2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


2013

Battle of vanni

வன்னியின் பெருஞ்சமர் சிறக்க வாழ்த்துகின்றோம்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியின் பெருஞ்சமர் சிறக்க வாழ்த்துக்கள்.

# கிருபா லேணர்ஸ்

Kiruba
Learners

(அரச அங்கீகாரம் பெற்ற
"A" தர
சாரதி பயிற்சிப் பாடசாலை)



மும் மொழிகளிலும் வாகனப் பயிற்சி அளிக்கப்படும்.
எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்புக்கள்.
குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்
தவணை முறையில் கட்டணம் செலுத்தும் வசதி.



www.kirubalearners.com

தலைமைக் காரியாலயம்: 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் T.P: 021 222 4353, 077 722 5292

| A9 வீதி, சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி | விசுவமடு | சுன்னாகம் | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|
| 021 492 3202 | 021 228 5505 | 021 300 6550 | 021 320 1515 | 021 224 2022 | 021 492 3201 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Print Media : Halo Star 021 320 1882

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org